மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் கால்நடைகளை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிதாக 100 கால்நடைக் கிளை நிலையங்களைத் துவக்குவதற்கும், 200 கால்நடைக் கிளை நிலையங்களைத் தரம் உயர்த்தி, கால்நடை மருந்தகங்களாக உயர்த்துவதற்கும் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். மேலும், ஏராளமான காலிப் பணியிடங்களில் பணியாளர்களை நியமித்திருக்கிறார்கள். கொருக்கை கால்நடைப் பண்ணையின் மேம்பாட்டினைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அக்கறையோடு சொன்னார்கள். எதிர்காலத்திலே அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

26—

நியாய விலைக் கடை

***121689—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, அல்லிக்குண்டம் ஊராட்சி, பொம்மன்பட்டியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில், அல்லிகுண்டம் என்கிற பொது விநியோகக் கடையிலே 1,033 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதிலிருந்து பிரித்து ஏற்கெனவே பெருமாள்கோவில்பட்டி என்கிற ஊருக்கு 210 குடும்ப அட்டைகளைக்கொண்டு ஒரு பகுதிநேரக் கடை

2011 பிப்ரவரி 8]

துவக்கப்பட்டுள்ளது. மேலும், பொம்மன்பட்டி என்கிற ஊருக்கு ஒரு புதிய பகுதிநேரக் கடை கேட்டிருக்கிறார்கள். 2.5 கி.மீ. தூரம் இருந்தாலும், அந்தப் பகுதியிலே 54 குடும்ப அட்டைகள்தான் இருக்கின்றன. அரசாங்கத்தின் விதிப்படி 150 குடும்ப அட்டைகள் இருந்தால்தான் ஒரு பகுதிநேரக் கடை கொடுக்க முடியும். எனவே, 54 குடும்ப அட்டைகள் இருக்கின்ற காரணத்தினால் அங்கு ஒரு பகுதிநேரக் கடை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.*

திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, அல்லிகுண்டம் ஊராட்சியில் பொம்மன்பட்டி பகுதியில் சுமார் 2.5 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள், பெண்கள், தாய்மார்களெல்லாம் மிகவும் சிரமப்படுகிறார்கள். அரசு, தற்போது இருக்கின்ற விதியைத் தளர்த்தி, அந்தப் பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியத்தில், பாணாங்குப்பம்பட்டி ஊராட்சியிலிருந்து ரெட்டியம்பட்டி என்கின்ற கிராமம் சுமார் 2.5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. அங்கு 150 கார்டுகள் இருக்கின்றன. அந்த ரெட்டியம்பட்டி கிராமத்திற்கு ஒரு பகுதிநேரக் கடை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞருடைய அரசைப் பொறுத்தவரையில் எப்போதுமே நியாயமாக, நேரடியாக, எந்தவித பாரபட்சமும் இல்லாமல் நடைபெறுகின்ற அரசு என்பதற்கு ஓர் உதாரணமாக உசிலம்பட்டி தொகுதியில் இப்போது ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் ஏற்கெனவே 8 பகுதிநேரக் கடைகள்தான் இருந்தன. ஆனால், நீங்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு 35 பகுதிநேரக் கடைகள் இந்த நான்கரை ஆண்டுக் காலத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் உங்களுக்குப் புரியும், எந்தவித பாரபட்சமும் இல்லாமல் இந்தப் பொது விநியோகத்*

[2011 பிப்ரவரி 8

திட்டம் அந்தத் தொகுதியிலே இப்போது சிறப்பாக நடைபெறுகின்றது என்று, அப்படிப் பார்க்கும்போது, உங்களது தொகுதியிலே இப்போது சுமார் 143 பொது விநியோகக் கடைகள் இயங்கி வருகின்றன. இப்போது புதியதாக ஒரு கடையைக் கேட்டிருக்கின்றீர்கள். அந்தப் பகுதியில் 155 கார்டுகள், 1.5 கி.மீ. தூரத்திலே இருக்குமேயானால் அங்கு ஒரு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்குவதற்கு இந்த அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, எங்கள் உசிலம்பட்டி தொகுதியில் புதிதாக குடும்ப அட்டை வழங்கக் கோரி விண்ணப்பித்தவர்கள் சுமார் நான்கு மாத காலமாக குடும்ப அட்டை கிடைக்காமல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, புதியதாக குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாகக் குடும்ப அட்டை வழங்குவதோடு, புதிய குடும்ப அட்டை வழங்குவதற்குக் குடும்ப அட்டையிலிருந்து யாராவது ஒருவருடைய பெயர் நீக்கம் செய்யப்பட்டு சான்றிதழ் கொண்டுவர வேண்டும் என்று ஒரு விதிமுறையைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் பல்வேறு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. இதுவரை குடும்ப அட்டையே இல்லாத குடும்பதாரர்களுக்கு எவ்வாறு குடும்ப அட்டையிலிருந்து பெயர் நீக்கம் செய்து, சான்றிதழ் அளிக்க முடியும்?

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. இ. மகேந்திரன்: ஆகவே, அரசு உடனடியாக அந்த விதிகளைத் தளர்த்தி, இதுவரை குடும்ப அட்டைகள் இல்லாதவர்களுக்கு ஏதாவது ஒரு ஆவணத்தைச் சமர்ப்பிப்பதன் மூலமாக புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2011 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளைப் பொறுத்த அளவுக்கு அரசு 60 நாட்களுக்குள் மனுக்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்துள்ளது. ஏற்கெனவே, குடும்ப அட்டைகள் பெற வேண்டுமென்று சொன்னால், மாநில அளவில் இருக்கிற ஆணையாளரிடமிருந்துதான் குடும்ப அட்டைகளைப் பெற வேண்டுமென்ற நிலையை மாற்றி 4½ ஆண்டுக் காலத்திற்கு முன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே இந்தக் குடும்ப அட்டைகளை வழங்கலாமென்று அதிகாரத்தைத் தளர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது, மனுக்களை அங்கே பெறுகிறபோது 60 நாட்களுக்குள்ளே கொடுக்க வேண்டுமென்று விதி இருந்து, மாத மாதம் அரசின் சார்பாகப் பரிசிலனை செய்யப்பட்டு கொடுக்கப்படுகிறது. இந்த விடுதலைச் சான்று, அதாவது ஏற்கெனவே ஏகக் குடும்பமாக, கூட்டுக் குடும்பமாக இருந்தால், அங்கிருந்து பிரிந்து வந்து குடும்ப அட்டைகளைக் கேட்கிறபோது அங்கே நீக்கச் சான்றிதழ் பெற்றால்தான் புதிய குடும்ப அட்டைகளைப் பெற முடியும். இப்படி ஏற்கெனவே நீக்கச் சான்றிதழ் இல்லாமல் குடும்ப அட்டைகளைத் தொடர்ந்து கொடுத்த காரணத்தினால்தான் சென்சஸ் கணக்கிலே 6 கோடியே 61 இலட்சம் என்று இருந்தாலும்கூட, குடும்ப அட்டைகளைக் கணக்கில் எடுத்துப்பார்க்கிறபோது 8 கோடியாக மாறியது. எனவே, விடுதலைச் சான்றிதழ் வாங்கிக் கொண்டு வந்து கொடுக்க வேண்டுமென்று அரசு புதிதாக ஒரு விதியை அமைத்திருக்கிற காரணத்தினால்தான் அதைப் பெற்றுக்கொண்டு கொடுக்கிறார்கள். அதேநேரத்திலே அவர்களுக்கு இதுவரை அட்டை கிடைக்கவில்லையென்கிற நிலை வருகிறபோது, அவர் எங்கேயாவது பணி செய்கின்ற identity card இருந்தால் அல்லது புதிதாகத் திருமணம் செய்தவராக இருந்தால், திருமண அழைப்பிதழ் இருந்தால், அந்த அழைப்பிதழை இணைத்துக் கொடுத்தால் கொடுக்கலாமென்று அரசு சொல்லியிருக்கிறது. உங்களுடைய பகுதியைப் பொறுத்த அளவுக்கு அப்படி ஏதாவது குறைகள் இருக்கின்றன என்று புகார் கொடுத்தால் உடனே மாவட்ட ஆட்சித் தலைவரைத் தொடர்பு கொண்டு உங்களுக்கு உரிய நேரத்தில் அந்த குடும்ப அட்டைகள் பெறுவதற்கு இந்த அரசு வேண்டிய

முயற்சிகளைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள நியாய விலைக் கடைகள் மொத்தம் எத்தனை? அதிலே அரசுக் கட்டடங்களில் இயங்கக்கூடிய நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை எத்தனை? அதைப்போல, தனியார் கட்டடங்களிலே வாடகை கொடுத்து இயங்கக்கூடிய நியாய விலைக் கடைகள் எத்தனை என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த அளவுக்கு முழுநேரக் கடைகள், பகுதிநேரக் கடைகள் என்று எடுத்துக்கொண்டால் 32,255 பகுதிநேரக் கடைகள் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே சொந்தக் கட்டடங்கள், அதாவது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படும் 4,541 கடைகள் சொந்தக் கட்டடங்களில் செயல்படுகின்றன. அரசின் சார்பாகக் கட்டிக்கொடுக்கிற, அதாவது, உள்ளாட்சித் துறையின் மூலமாக, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, இப்படி அரசின் சார்பாகக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கட்டடங்கள் 18,770. அதுமட்டுமல்ல, வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்ற பொது விநியோகக் கடைகள் 8,944. ஆக, தமிழ்நாட்டிலே 32,255 இடங்களில் பொது விநியோகக் கடைகள் சிறப்பாகச் செயல்பட்டு கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேரக் கடைகளைத் திறப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின்மூலமாகத் திறக்கப்படுகின்ற கடைகள் உடனடியாகத் திறக்கப்பட்டு அந்த ஆணை எங்களுக்குக்

2011 பிப்ரவரி 8]

கொடுக்கப்படுகிறது. ஆனால், சிலவற்றிற்குச் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள், பல்வேறு பிரச்சினைகள் அடிப்படையிலே சிறப்பு நேர்வாகக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பரிந்துரை செய்து அது ஆணையரகத்திற்கு வந்த பிறகும் அனுமதி கிடைப்பதற்குப் பல ஆண்டுகள் ஆகின்றன. அதில் கால தாமதம் ஏற்படுகிறது. விரைவாக ஆணைகளைப் பெற்று உடனடியாக அந்தக் கடைகளைத் திறப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிகிற அதேவேளையில், என்னுடைய வீரசிங்கம் குப்பத்தில் தொடர்ந்து 4½ ஆண்டுகளாக அந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன. இப்போதுதான் அரசடிகுப்பத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். அதேபோல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற முதலாம் ஆண்டு, என்னுடைய பண்ருட்டி தொகுதி, திருவதிகையில் மண்ணெண்ணெய் பங்க் ஒன்று அமைத்துத் தரப்படுமென்று சிறப்புக் கவன ஈர்ப்பில் பதில் அளித்தார்கள். அதாவது, 'சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி கொடுக்கமாட்டார்' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதுமாதிரி அமைச்சர் அவர்கள் இந்த அவையில் சிறப்புக் கவன ஈர்ப்பில் பதில் கொடுத்து, அதற்கு அனுமதியும் கொடுத்துவிட்டார்கள். ஆனால், மண்ணெண்ணெய் பங்க் திறப்பதற்கு, சிறப்புக் கவன ஈர்ப்பில் பதில் அளித்ததை, அந்த assurance-ஐ, அரசின் உத்தரவை நிறைவேற்றுவதற்கு இதுவரையில், துறையினுடைய அலுவலர் பெருமக்கள் எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து, உடனடியாக அந்த மண்ணெண்ணெய் பங்க் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேரக் கடைகளைப் பொறுத்த அளவுக்கு ஏற்கெனவே விதிகளெல்லாம் தளர்த்தப்பட்டு 1½ கி.மீ. தூர இடைவெளியும் 150 கார்டுகளும் இருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவரே வழங்கலாமென்று அரசு அதிகாரம் அளித்திருக்கிறது.

[2011 பிப்ரவரி 8

சில நேரங்களிலே சட்டம்-ஒழுங்கு கெடுகிறபோது அல்லது மலைப் பகுதியாக இருக்கிறபோது 7 குடும்ப அட்டைகள், 8 குடும்ப அட்டைகள் குறைகின்றன என்று சொன்னால் அரசினுடைய சிறப்புச் சலுகைகளைப் பயன்படுத்தி அவற்றை வழங்கலாம் என்று அமைச்சர் அவர்களுக்குக் கோப்புகள் வருகின்றன. அப்படி வருகிறபோது ஆணையர் மூலமாகத்தான் வரப்பெறுகின்றன.

முற்பகல் 10-35

சில நேரங்களிலே கோப்புகள் வருகிறபொழுது, பொது விநியோகத் திட்டத்தின் கீழான முழுநேரக் கடைக்கும், பகுதிநேரக் கடைக்குமான இடங்களுக்கு sketch போட்டு படங்கள் எல்லாம் அனுப்ப வேண்டும். சில நேரங்களில் கோப்புகள் அப்படி வராதபொழுது காலதாமதம் ஏற்படுகிறது. ஆனாலும்கூட, இந்த அரசு 30-ஆம் தேதிக்குள் தமிழகம் முழுவதும் எங்கெங்கெல்லாம் பகுதிநேரக் கடைகள் கேட்டு மனுக்கள் நிலுவையில் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் உடனே clear செய்ய வேண்டுமென்று ஆணையாளருக்கு நான் உத்தரவிட்டிருக்கின்றேன். வரும் 28-ஆம் தேதிக்குள் அவையெல்லாம் சிறப்பாக அமையும்.

கவன ஈர்ப்பிலேகூட பண்ருட்டியிலே மண்ணெண்ணெய் bunk திறப்பதுபற்றி தெரிவித்ததாகச் சொன்னார்கள், இதே மாமன்றத்தில் சொல்லப்பட்டது. அதை இல்லையென்று நான் மறுக்கவில்லை. ஆனால், அரசு விதியின்படி பார்க்கிறபோது ஒரு மண்ணெண்ணெய் bunk நடத்தவேண்டுமென்று சொன்னால் குறிப்பிட்ட அளவுக்கு கார்டுகள் இருந்தால்தான் அந்தப் bunk-ஐ நடத்த முடியும். ஆனால், கார்டுகள் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றன. அது கூட்டுறவு இயக்கத்தின் சார்பாக நடைபெறுகிற மண்ணெண்ணெய் bunk. எனவே, கார்டுகள் குறைவாக இருக்கின்றன; அங்கு மண்ணெண்ணெய் bunk நடத்துவதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று கோப்பு வந்திருக்கிறது. இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை அரசு மீண்டும் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண்கள் 27, 28, 29 மற்றும் 30 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]